DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : பாலகணேஷ் | Father/Husband Name : ராஜ் |
| Age : 21 | Village : சங்கராபுரம் |
| Taluk : | Calling : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Nov 10, 2025 12:47 PM

(A1, A2 Present)

<u>**முதல் விசாரணை**</u> :-

1. நான் சங்கராபுரத்தில் குடியிருந்து வருகிறேன். விருதுநகர் உள்ள ஸ்ரீவித்யா கல்லூரியில் 3 ம் ஆண்டு படித்து வருகிறேன்.

2. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்னர் நவம்பர் 9 ம் தேதி நான், நிதீஸ்குமார், பாண்டித்துரை ஆகியோர் எங்கள் ஊரில் உள்ள மணி நடத்தி வந்த வெடிமருந்து குடோன் அருகேயுள்ள கிரிக்கெட் மைதானத்தில் மாலை 05.00 மணிக்கு விளையாடிக் கொண்டிருந்தபோது பாண்டி மைதானத்தில் ஓடியபோது, மைதானத்தில் இருந்த வெடி மருந்து திடீரென தீப்பிடித்தது. அதனால் பாண்டியின் மீது தீ பரவியது. அதன் அருகே நாங்களும் சென்றபோது வெடி மருந்து வெடித்தது. அதனால் எனக்கு முகத்திலும், கழுத்திலும், நெஞ்சிலும் , காலிலும், கையிலும் தீக்காயம் ஏற்பட்டது. பாண்டிக்கு முகத்திலும், கையிலும், உயிர்தடத்திலும் தீக்காயம் ஏற்பட்டது. நிதீஸ்குமாருக்கு முகத்திலும், காலிலும் தீக்காயம் ஏற்பட்டது.

3. மைதானத்திற்கு பின்புறம் எதிரி மணி என்பவரது தோட்டம் உள்ளது. நாங்கள் கிரிக்கெட் விளையாடும் போது பந்து தோட்டத்திற்குள் செல்லக்கூடாது என்ற காரணத்தினால், மைதானத்தில் வெடிமருந்துகளை எதிரிகள் பரப்பி வைத்திருந்ததாக மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு வந்த பிறகு தான் கேள்விப்பட்டேன்.

4. காயம்பட்ட எங்களை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனியலிருந்தபோது போலீசார் என்னை விசாரித்த விவரம் எனக்கு நினைவு இல்லை. ஆனால் நான் சிகிச்சை பெற்று வீட்டிற்கு சென்ற பிறகு போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**</u>

5. நாங்கள் விளையாட சென்றதாக கூறும் இடம் ஊருக்கு ஒதுக்கு புறமான பகுதி என்றால் நடந்து சென்றால் மூன்று நிமிடத்தில் செல்லக்கூடிய அளவில் உள்ள தூரமாகும். அந்த இடத்தை சுற்றி இரண்டு பக்கங்களில் ஓடையும் மற்ற இரண்டு பக்கங்களில் காடுகளும் இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்றது தீபாவளி சமயம் என்றால் தீபாவளி முடிந்து ஒரு வாரத்திற்குள் நடைபெற்றது. தீபாவளியின் போது ஏற்படும் பட்டாசு கழிவுகளை எங்கள் ஊரில் உள்ள மக்கள் மேற்படி ஓடை அருகே போடுவார்கள் என்றால் சரியல்ல. அந்த மைதானத்தில் எங்கள் ஊரில் உள்ள சிறுவர்கள்

தீபாவளி தினத்தில் பட்டாசு போடுவார்கள் என்றால் நான் அதை பார்த்தது கிடையாது.

6. நாங்கள் கிரிக்கெட் விளையாடுவதாக கூறும் இடம் எதிரிகளுக்கு சொந்தமான இடம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, அந்த இடத்திற்கு அருகே எதிரிகளுக்கு சொந்தமான இடம் இருக்கிறது. தீபாவளி சமயத்தில் எங்களுடைய மைதானத்தில் போடப்பட்ட பட்டாசுகளில் வெடிக்கப்படாத பட்டாசுகளை என்னுடைய நண்பர் எடுத்து வெடிக்க வைக்க முயற்சி செய்த போது தான் இந்த வழக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

7. என்னுடன் எத்தனை நபர்கள் விளையாட வந்தார்கள் என்றால் நாங்கள் மூன்று பேரும் தான் இருந்தோம். வழக்கு சம்பவம் நடைபெறும் போது மைதானத்தில் நிறைய சிறுவர்கள் இருந்தார்கள் என்றாலும், அவர்களை விசாரணை செய்தால் உண்மை சம்பவம் தெரிந்துவிடும் என்று நாங்கள் மூன்று பேர் மட்டும் இருந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. எங்கள் ஊரில் தீபாவளியின் போது போடப்பட்ட வெடிகளின் கழிவுகளை எங்கள் ஊரில் உள்ள மக்கள் நாங்கள் விளையாடுவதாக கூறும் மைதானம் அருகே தான் கொட்டுவார்கள் என்றாலும், அதையும் மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.
Nov 10, 2025 1:02 PM

Judicial Magistrate 2, Sattur